00083

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும்**
**இறுதிப் பரீட்சை - 2009**
**கணக்கியலும் நிதியியலும் - MCC 1206**
**காலம்: இரண்டு (2) மணித்தியாலங்கள்**

| திகதி: 12.12.2009 | நேரம்:1.30 பி.ப – 3.30 பி.ப |
|---|---|

**அறிவுறுத்தல்கள்**

- **1 ம் வினா அடங்கலாக நான்கு (4) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**
- **நிகழ்ச்சித் திட்டமிடப்படாத எண் கூட்டு இயந்திரங்களின் பாவனை அனுமதிக்கப்படும்**

01. பின்வரும் பரீட்சை மீதியானது, குமார் நிறுவனத்திற்காக, 31 டிசம்பர் 2008 இல் முடிவடையும் வருடத்திற்காக தயாரிக்கப்பட்டது.

| மீதிகள் | வரவு (ரூபா) | செலவு(ரூபா) |
|---|---|---|
| காசும் வங்கியும் | 41,000 | |
| காப்புறுதி | 18,000 | |
| மின்சாரம் | 21,000 | |
| வங்கிக்க கட்டணங்கள் | 4,000 | |
| 01.01.2008 இல் காணி, கட்டிடமும் திரண்ட தேய்மானமும் | 750,000 | 250,000 |
| 01.01.2008 தளபாடங்கள், பொருத்திகளும் திரண்ட தேய்மானமும் | 500,000 | 200,000 |
| அறவிடமுடியாக் கடன் | 4,200 | |
| பெற்ற தரகு | | 24,000 |
| விற்பனைத் திருப்பம் | 9,000 | |
| கொள்வனவுத் திருப்பம் | | 6,800 |
| கடன்பட்டோர் | 52,000 | |
| 01.01.2008 இல் இருப்பு | 31,000 | |
| கடன் கொடுத்தோர் | | 43,000 |
| 12 % வங்கிக் கடன் | | 250,000 |
| வங்கிக் கடன்மீதான வட்டி | 13,000 | |
| கொடுத்த கழிவு | 4,000 | |
| பெற்ற கழிவு | | 8,000 |
| சம்பளங்கள் | 31,000 | |
| விளம்பரம் | 18,000 | |
| வரிகள் | 14,000 | |
| கொள்வனவுகள் | 910,000 | |
| விற்பனைகள் | | 1,730,000 |
| குமாரின் பற்றுக்கள் | 27,000 | |
| தொலைபேசி | 15,000 | |
| பொதியிடல் | 7,000 | |
| 8% முதலீடு | 400,000 | |
| பெற்ற முதலீட்டு வருமானம் | | 13,000 |
| உள்வந்த வண்டிக் கூலி | 5,600 | |
| குமாரின் முதலீடுகள் | | 350,000 |
| | 2,874,800 | 2,874,800 |

பின்வரும் தகவல்களையம் கருத்தில் கொள்க

- 31.12.2008 இல் மதிப்பிடப்பட்ட இறுதி இருப்பு ரூபா. 23,000/=
- திரு. குமாரின் வீட்டில் வேலை பார்க்கும் வேலையாளுக்கு கொடுக்கப்பட்ட சம்பளமான ரூபா. 3000/= வும் பரீட்சை மீதியிலுள்ள சம்பளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- 2008 டிசம்பர் மாதத்திற்கு செலுத்தப்படவேண்டிய மின்சாரக் கட்டணச் சிட்டையானது, 2009 ஜனவரி மாதத்திலேயே பெறப்பட்பது.
- முறையே ரூபா.2000/= மற்றும் ரூபா 3000/= பெறுமதியான காப்புறுதி, மற்றும் விளம்பரக் கட்டணங்கள் அடுத்த வருடத்திற்கு முன் கொண்டு செல்லப்பட முடியும்.
- கட்டங்கள் 5 % நேர் கோட்டு முறையில் தேய்விடப்பட வேண்டும்.
- தளபாடம், பொருத்துக்கள் 10% குன்றும் மீதி முறையில் தேய்விடப்படவேண்டும்.
- பரீட்சைமீதியில் காட்டப்பட்ட வங்கிக் கடனும், முதலீடுகளும், வருட ஆரம்பத்திலிருந்து, நிறுவனத்தின் ஏடுகளில் காணப்படுகின்றன. வங்கிக் கடன் மீதான வட்டியும, முதலீடு களிலிருந்து பெறவேண்டிய வருமானமும் வருட முடிவில் அட்டுறுவாக இருந்தன்.
- பரீட்சை மீதியில் காட்டப்பட்ட கடன் பட்டோரில் ரூபா 3000/= அறவிட முடியாக் கடனாக பதிவழிக்கப்பட வேண்டியதுடன், மீதிக் கடன்பட்டோரில் 5% ஐயக் கடனுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

மேற் கூறப்பட்ட தகவல்களிலிருந்து

1. 31/12/2008 இல் முடிவுற்ற வருடத்துக்கான, வியாபார, இலாப நட்டக் கணக்கைத் தயாரிக்குக.
2. 31/12/2008 இல் உள்ளபடி ஐந்தொகை தயாரிக்க. (40 புள்ளிகள்)

02.

அமல் உள்நாட்டுச் சந்தைக்கு விநியோகிக்கக் கூடிய வகையில், கேக் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார். அவருடைய உற்பத்தி தொடர்பான 2008ம் ஆண்டுக்கான தகவல்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

மூலப்பொருட்கள் கொள்வனவு ரூபா. 167,000/=
மூலப் பொருட்கள் உட் கொண்டு வருவதற்கான செலவு ரூபா. 4,500/=
செலுத்தப்பட்ட வாடகையும், வரியும் ரூபா. 12,000/= (தொழிற்சாலை 60% இடத்தில் அமைந்துள்ளது)
ஏனைய நேரில் மூலப்பொருட்கள் ரூபா. 15,000/=
எரிபொருளும், சக்தியும் ரூபா. 28,000/= (20 % அலுவலக நிர்வாகத்திற்கு செலவாகிறது)
நேர் கூலிகள் ரூபா. 78,000/=
தொலைபேசி ரூபா. 7,000/= (80 % நிர்வாகத்திற்கு செலவாகிறது)
மேற்பார்வையாளர் சம்பளம் ரூபா. 20,000/=
01.01.2008 இல் நடைமுறையிலுள்ள வேலை ரூபா. 21,000/=
31.12.2008 இல் நடைமுறையிலுள்ள வேலை ரூபா. 11,000/=
நிலையான சொத்துக்கள் மீதான தேய்வு ரூபா. 27000/= (இயந்திரங்கள் மீதான தேய்வானது மொத்த தேய்வில் 2/3 ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது)
01.01.2008 இல் மூலப் பொருட்கள் ரூபா. 15,000/=
31.12.2008 இல் மூலப் பொருட்கள் ரூபா. 12,000/=

நீர் வேண்டப்படுவது

அ. 31.12.2008 இல் முடிவுற்ற வருடத்திற்கான, அமலின் உற்பத்திக் கணக்கைத் தயாரிக்குக.

ஆ. 2008 இல் அமல் ஒரே அளவான 20000 கேக் பெட்டிகளை உற்பத்தி செய்திருப்பின், ஒரு பெட்டிக்கான உற்பத்திச் செலவைக் காண்க.

இ. உற்பத்திச் செலவுடன் 25% இலாபம் சேர்க்கபடின், ஒரு கேக் பெட்டியின் விலை யாது? (20 புள்ளிகள்)

**Q3.**

விஜேய் மார்ச்சு 1ம் திகதி 2009 இல், ஒரு சில்லறை வியாபாரத்தை ஆரம்பித்தார். அவருடைய வியாபாரத்தின் முதல் மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.

01.03.2009 இல் ரூபா. 300,000/= ஐ காசாக மூலதனமிட்டு வியாபாரத்தை ஆரம்பித்தார்.

04.03.2009 காசுக்கு வாங்கப்பட்ட பொருட்கள் ரூபா.45,000/=

06.03.2009 காசுக்கு விற்பனை ரூபா.52,000/=

11.03.2009 பர்ணாந்துவிடமிருந்து ரூபா.40,000/= பெறுமதியான பொருட்கள் கடனுக்கு வாங்கப்பட்டன.

14.03.2009 மோகனுக்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் ரூபா.52,000/=

17.03.2009 முறையே ரூபா.4,200 மற்றும் ரூபா.3,500/= பெறுமதியான மின்சார மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் செலுத்தப்பட்டன.

19.03.2009 பர்ணாந்துவுக்கு செலுத்திய பணம் ரூபா.30,000/=

21.02.2009 வேறொரு நிறுவனத்திற்கு விநியோகச் சேவையாற்றியதற்காக பெற்றுக் கொண்ட தரகுப் பணம் ரூபா. 8,000/=.

23.03.2009 மோகன் தனது கடனை முற்றாகத் தீர்க்கும் பொருட்டு பணத்தை வழங்கினார்.

24.03.2009 ஒரு ஊழியருக்கு வழங்கப்பட்ட சம்பளம் ரூபா.5,500/=

27.03.2009 மகேனுக்கு மேற்கொள்ளப்பட்ட விற்பனை ரூபா.27,000/=

31.03.2009 விஜயின் காசுப் பற்று ரூபா.8,000/=

மேற் குறிப்பிட்ட தகவல்களிலிருந்து, பினவருவனவற்றினைத் தயாரிக்குக.

- முதன்மை ஏடுகள்
- பொருத்தமான ஏடுகளிலிருந்து இரட்டைப் பதிவுகள்.
- பரீட்சை மீதி (20 புள்ளிகள்)

**Q4**

**I.** "காசுக் கணக்கானது இரட்டைத் தொழிற்பாடுகளை ஆற்றுகிறது". இக் கூற்றை விளக்குக.

**II.** சிறிய அளவான உற்பத்தி முயற்சியாளருக்கு, சில்லறைக் காசேட்டின் முக்கியத்துவத்தை விளக்குக.

**III.** சிறு முயற்சியாளர்கள், தங்களது நீண்ட கால முதலீட்டைப் பெற்றுக் கொள்ளக்கூடிய மூலங்களை அடையாளங்கண்டு விளக்குக.

**IV.** சிறு முயற்சியாளர்கள் தங்களது, காசுப் பாதீட்டில் தோன்றும் மிகையை எவ்வாறு பயன்படுத்தமுடியும் என விளக்குக. (20 புள்ளிகள்)

**Q5.** பின் வருவனவற்றில் ஏதாவது நான்கிற்கு (4) சிறு குறிப்பெழுதுக.

I. கணக்கீட்டு சமன்பாடு

II. தொழிற்படு மூலதனம்

III. காசுப் பாயச்சுற் கூற்று

IV. வேலைக் கிரயவியல் (Job costing)

V. இலாப நட்டமற்ற புள்ளி (Break-Even Analysis)

VI. கணக்கீட்டு விகிதங்கள் (20 புள்ளிகள்)